09.10.2025 MCOP No.60/2022

சாட்சி : PW 1 ரத்தினம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என வழக்கறிஞர் கூறிய நிலையில் 1 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. இந்த வழக்கில் இறந்து போனது எனது மனைவி என்றால் சரிதான். விபத்து நடக்கும் போது எனக்கு என்ன வயதிற்கும் என்றால் 65 வயது இருக்கும். விபத்தில் இறந்தவர் எனது 2வது மனைவி ஆவார். விபத்தில் இறந்த மனைவிக்கு எத்தனை வயதிருக்கும் என்றால் 48 வயது இருக்கும். விபத்து சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நந்தகோபால் எங்கள் ஊரைச்சேர்ந்தவரா என்றால் எங்கள் ஊரின் பக்கத்து ஊரான தானாவயல் கிராமத்தைச் சேர்ந்தவர், அவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. அகல்யா என்பவர் எனக்கு சொந்தமா என்றால் சொந்தம் தான். விபத்து காலக்கட்டத்தில் நான் எனது மனைவி, மகன், அகல்யா ஆகிய அனைவரும் எங்கள் சொந்த கிராமமான சக்கந்தி கிராமத்தில்தான் இருந்தோம் என்றால் சரிதான். நந்தகோபால் காரை எங்கு வைத்து ஓட்டுகிறார் என்றால் சென்னையில் ஓட்டுவார் விபத்து சமயத்தில் ஊரில் வந்து இருந்தார். அவர் வைத்திருந்த கார் சொந்தகாரா அல்லது வாடகைக்காரா என்றால் வாடகைக்காரர் ஆகும்.

2. எனது மனைவி ரூ.15,000/- சம்பாதிக்கிறார் என்பதற்கு ஆதரவாக ஆதாரம் எதுவும் இருக்கிறதா என்றால் எனது மனைவி வெளியில் வேலைக்கு சென்று வருவார். குடும்ப விவசாயத்தை நான் தான் பார்த்துக்கொண்டு வருகிறேனா என்றால் நான் தான் பார்த்து வருகிறேன். நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்று சொன்னால் சரியல்ல. நந்தகோபால் அதிவேகமாக ஓட்டிச்சென்றபோது எனது மனைவியும் உடன் சென்றவர்களும் தடுத்திருந்தால் விபத்து தடுக்கப்பட்டிருக்கும் என்று சொன்னால்

சரியல்ல. எனது மனைவி எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றும் வருமானம் எதுவும் ஈட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. பாலிசி விதிமுறைகளை 1ம் எதிர்மனுதாரர் மீறி இருப்பதால் விபத்து இழப்பீட்டு தொகையை அவர் வசம் தான் கேட்கவேண்டும் என்றாலும் அதனால் 2 எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவிக்கு விபத்தின் போது 60 வயதிற்கு மேல் இருக்கும் என்றும், கூடுதலாக இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதால் அவரது வயதை குறைவாக காண்பித்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.